Reg. No. M. 1534.

REGISTRAR OF BOOKS
- JAN 1929
OFFICE OF THE ... MADRAS



R. C. Training School Magazine, Trichinopoly.

திருச்சிறுப்பள்ளி
திருக்குடும்பப் பாடசாலையில் மலரும்

போதனு விஷயப் பூங்கொத்து.

மாதமொருமுறை மலரும்: வருஷ சந்தா ரூபாய் 1.

கொத்து 18.	நவம்பர் 1928.	மலர் 5.

பத்திராதிபர் குறிப்புகள்.

... 25-ம் தேதி நடைபெறும் போதனுமுறை பரீட்
...ட்டியவர்கள் எந்த இடத்தில் பரீட்சை எழுத
...வித்தார்களோ அந்த இடத்து பாடசாலைத்
...ருக்கு மார்ச்சு-மீ 15, 16 தேதிகளில் எழு
...ம்பரைத் தெரிந்துகொள்ளக்கடவார்கள்.

*** ***

JL
NHPP
N28.18.5
18227

பூங்கொத்து வி. பி. யில் அனுப்பவேண்டுமென்று கேட்டுக் கொண்டபின் அனுப்பியும், சிலர் வி. பி. சார்ஜ நஷ்டம் ஏற்படும் படி திருப்பியடித்து விடுகின்றனர். என்ன தயாளம்!

சந்தாதார் பக்கம்.

[இத்தலைப்பின்கீழ் சந்தாதார் கேட்கும் கேள்விகள், கேள்விகளுக்கு அவர்கள் சொல்லும் விடைகள், அவர்கள் எழுதும் கடிதங்கள், வியாசங்கள் முதலியவைகளைப் பிரசுரிப்போம். எழுதுபவர்கள் இதற்கென்று பிரத்தியேகமான காகிதத்தின் இடது பக்கம் கொஞ்சம் இடம்விட்டு காகிதத்தின் ஒரே பக்கத்தில் தெளிவாயும் சுருக்கமாயும் எழுதும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். சந்தாதாரின் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்திரவாதியல்லர்.]

ஆரம்பக்கல்வியும் அதன் மேலதிகாரிகளும்.

ஆரம்பக்கல்வியின் அஸ்திவாரகர்களாகிய ஆரம்ப ஆசிரியர்களில், "லோவர்கிரேட் உபாத்திமார் எவ்விதத்திலாவது ஹையர்கிரேட் உபாத்திமாராக வழி தேடிக்கொள்ளாவிட்டால் அவர்கள் உபாத்திமைத் தொழிலையே விட்டுவிடும்படியான நிர்ப்பந்தம் ஏற்படும்போல் தோன்றுகிறது" என, ஆரம்பாசிரியர்களுக்காகத் திருச்சி ஆர். ஸி. போதனாமுறைப் பாடசாலையினின்றும் மாதந்தோறும் ஒரு ரூபாய்ச் சந்தாவில் வெளிவரும் "போதனாவிஷயப் பூங்கொத்து" செப்டெம்பர் மாத இதழில் அதன் பத்திராதிபர் அறிவித்திருக்கிறார்கள். அந்நிர்ப்பந்தம் ஏற்படுத்தும் அதிகாரியே அவ்வழியையுங் கூறவேண்டியதுதான் முறையாகும். இல்லையேல் இது முறைதவறிய வழியே—யோசனையே—காரியமே—செய்கையேயாகுமென்பதில் ஐயமில்லை. இது ஒருவனை வேலைக்கமர்த்தி, சாகுபடியேயில்லாத ஒரு நிலத்தினைச் சாகுபடிக்கு லாயக்கானதாய்ச் சீர்திருத்தச் செய்து, அப்படிச் செய்தபின், சாகுபடி செய்ய ஆரம்பிக்கையில், நீ வேண்டாம் போ எனின், கஷ்டப்பட்டு உழைப்பவன் ஒருவன், அதன் ஊதியத்தை அடைபவன் வேறொருவனாக ஆவதுபோலன்றோ இருக்கின்றது! இப்படிச் செய்வது எவ்விதத்திலும் நியாயமே ஆகாது.

1910-முதல் 1914-உடன் முடிந்த வருஷங்களில் லோவர், ஹையர் இரு கிரேடிற்கும் ஒரே டெக்ஸ்ட் புக் முதலிய எல்லா பாடங்களையும் வித்தியாசமில்லாமற் கற்பித்து, பரீட்சையிலும்

182277

வித்தியாசமில்லாமல் ஒரேவிதமாகவே பரீட்சிக்கப்பெற்று, சர்ட்டிபிகேட்டும் வித்தியாசமில்லாமல் "எலிமேண்டரி கிரேடு" என்று பெற்று, பொது (சாதாரண)ப் படிப்பில் லோவர்கிரேடாயுள்ள ஆசிரியர்கள் இதுவரையில் எவ்வளவோ கரடியாய்க் கதறியும் கவனியாமல் வித்தியாசப்படுத்தி வந்ததுபோல் இனியும் நடத்த —நிர்ப்பந்தப்படுத்தப் போகிறார்களா? அல்லது அந்த சர்ட்டிபிகேட்டுக்கு மதிப்பு கொடுத்து, சாதாரணப் பரீட்சையில் லோவர் கிரேடாயிருந்தாலும் ஹையர் கிரேடாகவே பாவித்து நடத்தி அவர்களது அரிய சர்ட்டிபிகேட்டு (யோக்கியதா பத்திரத்து)க்கு, அவர்களே யோக்கியதை (மதிப்பு) கொடுக்கப் போகிறார்களா என்பது தெரியவரும். இல்லையேல் அது, அந்த யோக்கியதா பத்திரம்—சர்ட்டிபிகேட்டு எத்தன்மையானதென்று —மதிப்புடையதென்று அறிவாளர்களே அறிந்துகொள்ளவேண்டியதுதான். அந்த யோக்கியதா பத்திரத்தை அதிகாரிகள் வெறுங் காகிதமாக—மதிப்பின்றிச் செய்யமாட்டார்களென்றே எண்ணுகின்றோம். இரு கிரேடிற்கும் ஒரேவித பரீட்சையாயினும், விடைகளை இருபாலரிடத்திருந்தும் ஏற்றத்தாழ்வாய்க் கவனித்துத்தான் மார்க்குகள் (சர்ட்டிபிகேட்டு) கொடுத்திருப்பார்களென ஒரு சிலர் உரைக்கலாம். இது எவ்விதத்திலும் பொருந்தாதென்பது திண்ணம். இது, ஒரு விருந்தில்—ஒரே பந்தியில் பிரபுக்களின் இலைகளுக்கு ஒருமாதிரியும், மற்றவர்களின் இலைகளுக்கு ஒருமாதிரியும் பரிமாரப்பெறும் என்னுங் கூற்றினையே நிகர்க்கும். "ஹையர் கிரேடு ஆசிரியரனைவரும் திறமையுடன் திகழ்வரென்றுவது, லோவர் கிரேடு பயின்ற ஆசிரியரனைவரும் திறமையின்றித் திகைப்பரென்றுவது தெளிவாய்க் கூறல் இயலாது" எனக் கூறும் மேலே கூறிய தாய்ப்பாடசாலையின் தலைமைக்கு அடுத்த தகைமை பொருந்திய ஆசிரியராம் திருவாளர் T. S. கணபதி அய்யரவர்களின் அரியவுரையொன்றே மேலே கூறியவற்றிற்கும், லோவர் கிரேடு ஆசிரியரனைவரையும் ஒருங்கே நிறுத்திவிடுவதென்பதற்கும் போதிய அறிவுறுத்தலாகும்.

மேலே குறிப்பிட்ட வருஷங்களுக்கு முன்னும் பின்னும் பயின்ற லோவர் கிரேடு ஆசிரியர்களை உடனே நின்றுவிடும்படி நிர்ப்பந்திப்பதைவிட, லோவர் கிரேடு பயிற்சியை நிறுத்தி ஹையர் கிரேடு பயிற்சியை விருத்திபண்ணி, லோவர் கிரேடு ஆசிரியர்களை அவர்களது சர்வீஸின் முடிவிலிருந்து விலகும் வரையில் குறைந்து வருவதைக்கொண்டு காலப்போக்கில் குறைத்துவருதலே சாலச் சிறந்ததும், அறிவாளிகளின் கடமையும், பெருந்தன்மையும், கிரமமும் எனின் மிகையாகாது.

லோவர்கிரேடை—பயிற்சியையே எடுத்துவிடுவதென்பது, பெரும்பான்மையான பாடசாலைகளையுடைய கிராமாந்தரங்களின் ஆரம்பக்கல்விக்கு இயற்றும் பெருத்த இடையூறே என்போம். இதனை அநுபவத்தில் கண்டிருக்கலாம்—காணலாம்: கிராமாந்தர ஜனங்களோடு கலந்து அவர்களது மனப்பான்மைக்கேற்ப நடப்பவர் பெரும்பாலும் லோவர்கிரேடு ஆசிரியரேயாவர். சிறுபான்மை ஹையர்கிரேடு ஆசிரியரே அவ்விதமிருப்பர். பெரும்பான்மையான ஹையர்கிரேடு ஆசிரியர்கள், தாங்கள், கிராமாந்திரவாசிகளைவிட அதிகக் கல்வி கற்றவர்களென்ற பெரும் மதிப்பை உடையவர்களாய்ச் சற்று கலந்து உறவாடப் பின்வாங்குவார்களென்பது, "தற்போதில் லோவர்கிரேடு ஆசிரியரோடு உழைக்கும் ஹையர் கிரேடு உடன் ஆசிரியர்கள் கிராமப் பாடசாலைகள்மட்டில் அதிக திருப்தியோடும் திறனுடனும் ஊக்கத்தோடும் வேலை செய்கிறார்களென ருசுவாகிவிட்டதாகத் தெரியவில்லை, கேள்விப்படவுமில்லை" எனக் கூறும் மேற்குறிப்பிட்ட ஆசிரியரவர்களது அரியவுரையிலிருந்தும் இனிது விளங்கும். இதன் உண்மை கிராமாந்திரப் பழக்கம் உள்ளவர்களுக்கே—அநுபவமுள்ளவர்களுக்கே—விசாரித்தவர்களுக்கே—விசாரிப்பவர்களுக்கே நன்கு விளங்கும். குறிப்பிட்ட ஆசிரியரவர்களோ வருடந்தோறும் புது புது ஆசிரிய மாணவர்களோடு கலந்து உறவாடுபவர்—பழகுபவர்—கிராமாந்திர விஷயங்களை விசாரிப்பவராகும். இதினின்றும், ஹையர் கிரேடைச் சேர்ந்த என் சகோதர ஆசிரியர்களைக் குறைகூற வேண்டுமென்பது எனக்கும், மேலே குறிப்பிட்ட போதகாசிரியரவர்களுக்கும் ஒரு சிறிதும் எண்ணமில்லையென்பது திண்ணம்—உண்மையாகும். அவரும் ஓர் உயர்தர ஆசிரியரே என்பதும் தன்னையொத்த—அடுத்த ஆசிரியரை உயர்நிலைமைக்குக் கொண்டுவரவேண்டும் என்ற எண்ணமுடையவர்—பெரும்பாலும் கிறீஸ்துவ சகோதர ஆசிரிய மாணவர்களுக்கே—அதிலும் ஆதி திராவிட ஆசிரிய மாணவர்களுக்கும் ஆசிரியராயுள்ளவர். இவர்களையும் உயர்வுக்குக் கொண்டுவர வேண்டுமென்ற எண்ணமுடையவர் என்பதும் இங்கு கவனிக்கத்தக்கது. 'உள்ளதைச் சொன்னால், நொள்ளைக் கண்ணனுக்கு நோப்பாளம்' என்பதற்கிணங்க ஆத்திரப்படாமல், 'பொறுமை கடலினும் பெரிது' என்பதற்கொப்ப உண்மையை உணர்ந்தும், இங்கு கூறியவற்றிற்கொப்ப இயங்குவோர் இவைகளை இனியேனும் அகற்றி நாட்டின் நன்மைக்கேற்றவாறு விளங்குமாறும் வேண்டுகின்றேன். லோவர்கிரேடிலும் கவனிப்பில்லாத ஆசிரியர் இல்லாமலில்லை, ஒரு சிலர் இருக்கவே இருப்பர் என்பதையும் ஒப்புக்கொண்டு, அவர்களுக்கும் இவ் வேண்டுகோளைச் சமர்ப்பிக்கின்றேன்.

ஆகவே, இங்கு கூறியவை எல்லா ஹையர்கிரேடு ஆசிரியர்களையுமாவது, நகர்ப்புறத்து ஹையர்கிரேடு ஆசிரியர்களையுமாவது பொறுத்ததல்லவென்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். கிராமாந்திர ஹையர்கிரேடு ஆசிரியர்களிலும், லோவர்கிரேடு ஆசிரியர்களைப்போல் உழைப்பவர் அறவேயில்லையென்பதுமில்லை. ஆனால், ஒரு சிலர்—சிலரினும் சிற்சிலர் அவ்விதமிருக்கக் கூடுமென்பதையும் ஒப்புக்கொள்ளுகிறோம். பெரும்பான்மையினரைப் பற்றியே இங்கு பேசுவதாகுமென்பதும் அறிஞர் அறியத்தக்கது.

ஹையர்கிரேடு ஆசிரியர்களையே நியமித்து, அநுபவத்தில் பரீட்சைபார்க்க விருப்பமிருப்பின், மேலே கூறியவாறு லோவர்கிரேடு ஆசிரியர்களை உடனே நிறுத்திவிடாமல், லோவர்கிரேடில் பயிலக்கூடியவர்களை நிறுத்திவிட்டு அத்தொகைக்குச் சரியான ஹையர்கிரேடில் பயிலக்கூடியவர்களை அதிகப்படுத்தி பரீட்சை பார்ப்பதே ஒருவிதத்தில் உசிதமாகும்.

மேலும், மேற்குறிப்பிட்ட ஆசிரியரவர்களது அரியவுரைகளில் கீழ்க்குறிப்பிடுபவைகளையும் இந்நிகழ்ச்சி சம்பந்தமான அதிகாரிகள் கவனித்தல் சிறப்புடையதாகும்:

1. எதிர்காலத்தில் கிராமப்பாடசாலைகளில் வேலையில் புகவிருக்கும் லோவர்கிரேடு ஆசிரியர்கட்கு விசேஷ ஊக்கம் பிறக்கும்படியான ஏற்பாடுகளை அமைக்க அதிகாரிகள் முற்படின், கிராம மாணவரின் கல்வித்திறமையும் அபிவிருத்தியும் ஓங்குமென ஏன் நம்பக்கூடாது?

2. ஏற்கனவே, கிராமக்கல்வியில் ஈடுபட்டிருக்கின்ற லோவர்கிரேடு பயின்ற ஆசிரியர் எதிர்காலத்தில் எவ்வாறு மதிக்கப்பெறுவர்?

3. தங்கள் படிப்பை அதிகரித்து அந்தஸ்தை உயர்த்திக் கொள்ளுமாறு ஏதாவது சந்தர்ப்பம் கிடைக்கப்பெறுவரோ?

4. உபாத்திமைத்தொழில் அநுபவம் வாய்ந்தவருக்கு விசேஷ சலுகை காட்டப்படுமோ?

5. லோவர்கிரேடு ஆசிரியரானாலும், அவர்களது வேலைத்திறன் செம்மையாய் இருக்கும்பக்ஷத்தில் அத்திறமைக்குச் சன்மானம் செய்தல் இழுக்காகுமா?

P. பரிமணப் பல்லவராயர்,
ஆசிரியர், போர்டு இந்து ஆண்பாடசாலை,
திருவெறும்பூர் (P. O.), S. I. R.

கை எழுத்தில் கவனிக்கத்தக்கவை.

நாம் கையினுல் எழுதும் எழுத்திற்கு கை எழுத்து என்று பெயர். நாம் பள்ளிக்கூடங்களில் பயிலுங்காலையில் நம்மைப் பரீட்சிப்பவர்களின் மனதிலும் நமது பிந்திய வாழ்நாளில் நம்மை நடத்துபவர்களின் மனதிலும் பதியச்செய்யவேண்டிய முதற் சங்கதி கை எழுத்துத்தான். ஒருவன் எவ்வளவு அதிகமாய்ப் படித்திருந்தாலும் அவன் கையெழுத்து நன்ருய் இராவிட்டால் சர்க்கார் உத்தியோகங்களில் போய் வேலை பார்ப்பது வெகு கஷ்டம். அரையணுச் சம்பளமாணுலும் அரண்மனைச் சம்பளமே மேல் என்று யாவரும் சொல்ல நாம் எல்லோரும் கேட்டிருக்கிருேம். ஆதலால்தான் நாம் மேற்சொல்லிய காரியங்களை அனுசரிப்பதற்கு வேண்டிய ஆயுதமாகிய கை எழுத்தையே தேட வேண்டும்.

நமது ஜீவிய காலமெல்லாம் நாம் சம்பாதிக்கக் காரணமாகிய இக்கருத்து அநேக பாடசாலைகளில் கவனிக்கப்படுவதில்லை. நாம் ஒருவனுடைய கையெழுத்தைக்கொண்டே ஒருவனுடைய படிப்பு, நடத்தை, குணம் முதலியவைகளை அறிவது வெகு எளிது. நமது தேசத்திலிருக்கும் பெரிய பாடசாலைகளில் கலை பயிலும் வித்தியார்த்திகளுக்குங்கூட மையைப் பேணுவில் எவ்வாறு தோய்க்கிறதென்றும், எழுத ஆரம்பிக்கிறதென்றும் இன்னமும் சரியாய்த் தெரியாது. மை, இறகு, காகிதம் எழுதும் விதம் இவை மூன்றும் எழுத்தைச்சேர்ந்த முக்கியமான பாகங்கள். மை: நாம் பேணுவை மையில் தோய்க்கும்போது மைக்கூட்டுக்குள் போவதற்காகவாவது போகச் செய்வதற்காகவாவது தக்கபடி அதிகமாவது அல்லது குறைவாகவாவது தோய்த்துவிடுகிருேம். ஆகையால் மையில் தோய்த்தெடுத்து எழுதும்போது மை அதிகமாக இருந்தால் எழுத்துக்கள் கனமாகவும் மை குறையக்குறைய எழுத்து இலேசாகவும் ஆகிவிடுகிறது. இதில் கவனிப்பது ஒன்றுண்டு: அதாவது, நாம் பேணுவை மைக்கூட்டிலிருந்து எடுத்து எழுதப்போவதற்குமுன் ஒரு செக்கண்டாவது மைக்கூட்டின் முகத்துவாரத்தில் வைத்திருந்து பின்னர் எடுத்து எழுதுவதே. மாணுக்கர்கள் மேற்சொல்லியவிதமாக ஒருவாரம் வரையில் எழுதிவருவார்களேயாணுல் அவர்களின் ஜீவியகாலம் முழுவதும் இவ்வாறு சுத்தமாக எழுதிவருவார்கள் என்பதில் ஐயமில்லை. ஆனுல் இப்பழக்கத்தை வாலிபர்களுக்கு இளமையிலேயே பழக்கப்படாததால் அதிக வயதுசென்றவர்களும் வெள்ளைக் காகிதங்களை மையினுல் கறுப்புக் காகிதமாக்கி தங்களுக்காக

ஏற்பட்ட மேஜைகளையும் பெஞ்சுகளையும் மையினாலே கறுப்புக் கோலமிட்டு அதிகமாக அசுத்தப்படுத்திவிடுகிறார்கள். ஆதலால் இதை நாம் இப்போதே சீர்திருத்திக்கொள்ளவேண்டும்.

இரண்டாவது கருவி பேனா: முன் காலத்தில் பேனாக்களுக் குப்பதிலாக இறகுகள் பேனாக்களாக உபயோகிக்கப்பட்டு வந்தன. பின் நாகரீகம் விர்த்தியாக உருக்குப் பேனாக்களும், காந்தப் பேனாக்களும், பௌண்டன் பேனாக்களும் செய்யப்பட்டு கையாடப்படுகின்றன.

மூன்றாவதாக காகிதம்: நாம் எழுதப் பழகும்போது கரடு முரடான காகிதங்களில்தான் எழுதவேண்டும். ஒரு மாணவன் இவ்வாறு பலநாள் கரடு முரடான காகிதங்களில் எழுதிவந்தபிறகு சற்று நல்ல காகிதங்களில் எழுத ஆரம்பிக்கலாம். இப்படியே முறை முறையே மாற்றி நல்ல காகிதத்தில் எழுத தேர்ச்சி பெறலாம்.

பயிலும் சகலரும் முதன் முதல் தங்கள் யுக்தியைச் செலுத்த வேண்டியது இதுதான். ஏனெனில் "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?" என்பதைக் கவனிப்பார்களாக.

R. S. Mariannan,
Higher Senior,
R. C. Boarding & Training Institution, Trichinopoly.

கதை சொல்லல்.—Story-telling.

காலவித்தியாசத்தினால் காடுகள் நாடுகளாயின, நாடுகள் காடுகளாயின, கடல்கள் மலைகளாயின, மடுக்கள் மேடுகளாயின, நன்மைகள் தீமைகளாயின, தீமைகள் நன்மைகளாயின, குப்பைக் காடுகள் பட்டணங்களாயின. ஜனங்கள் மாறினார்கள், தன்மைகள் மாறின, ஆடை ஆபரணங்களும் மாறின, காலவித்தியாசத்தால் யாவும் மாறிக்கொண்டே இருக்கின்றன. எனினும் குழந்தைகளின் தன்மைமாத்திரம் மாறவேயில்லை. எல்லாத் தேசங்களிலும் ஒரே மாதிரியாகவே இருக்கின்றன. பண்டைக்காலத்தில் பிள்ளைகள் கதை கேட்கவும், சொல்லவும், எழுதவும் எவ்வளவு ஆனந்தங் கொண்டார்களோ, இன்றும் அவர்கள் அதேமாதிரியாக ஆனந்தங்கொண்டிருக்கிறார்கள். கதைசொன்னால், "ஒருபிடிசாதம்

அதிகமாய் உண்கிறார்கள்.'' அதைக் கேட்கும் இன்பத்தினால் அவர்கள் மெய்மறந்து பரவசம் ஆகிறார்கள்.

ருஷியா தேசத்து பிரபுக்களுள் ஒருவராகிய டால்ஸ்டாய் என்பவர் வைத்துவந்த பள்ளிக்கூடமொன்றில் (கதைசொல்லல்) என்பதை ஒரு பாடமாக ஏற்படுத்தி இருந்தார். உபாத்தியாயர் கதைசொல்லத் துவக்கினவுடன் பிள்ளைகளுக்கு உண்டாகும் உற்சாகத்தையும், அவர்கள் கதைகேட்கும் ஆவலையும், அவர்கள் மெய்மறந்து நிற்கும் நிலைமையையும் அவர் விரித்து எழுதியிருக்கிறார். அதாவது மருந்தை வெல்லத்தில் வைத்து உண்பிப்பதுபோல இனிமையான விஷயங்களை கதை ரூபமாகக் கருத்து விளங்கப் புகட்டுவதேயாம். பள்ளிக்கூடங்களில் போதிக்கப்படும் விஷயங்கள் யாவற்றையும் பாடங்கள் என்கிறோம். அதுபோல மேற்சொல்லிய காரணத்தினால், கதை கற்பித்தலென்பதும் ஒரு பாடமாகவே இருத்தல் வேண்டும்.

கதை போதிப்பதின் முக்கிய கருத்து, பிள்ளைகளுக்கு உற்சாகமுண்டாகி, விநோதத்தில் பொழுதுபோக்குவதுபோல், விஷயங்களை அவர்களுடைய மனதில் பதியச்செய்வதெனினும், இக்காலத்துக் கிரந்த கர்த்தாக்கள் அதன் பயன்களை வரையறுத்துக் கூறியபடி வேறு சில அனுகூலங்களும் வாய்க்கின்றன.

அதாவது :—(1) இயற்கை அமைப்பின் இரகசியம்.
(2) பாஷையிற் பயிற்சி.
(3) திருந்திய பதோச்சாரணம்.
(4) ஞாபக சக்தி.

(1) இயற்கை அமைப்பின் இரகசியம் :—இது எப்படி அமையுமெனில், அடிக்கடி கதை கேட்பதினிமித்தம், எல்லாப் பொருள்களுக்கும், உற்பத்தி, ஆக்கம், அழிவு என்னும் மூன்று நிலைமைகள் உண்டென்றும், அதுபோலவே எல்லா விஷயங்களுக்கும், அடி, நடு, முடி என்பன முறையே தவறாதிருக்கவேண்டுமென்பதும் அவர்களுக்குப் புலப்படும். இந்த இரகசியத்தைத் தெரிந்துகொண்டால் உலகத்திலுள்ள பொருள்களில் வேறுபட்டுக் காண்பினும், ஒரே முடிவைப் பெறுமென்றும், அந்த நிலைமைகள் ஒன்றையடுத்தொன்று தவறாது வருமென்றும் அறிந்துகொள்ளலாம்.

மற்றைய மூன்று அனுகூலங்களும் கதைகளினால் ஏற்படும் என்பது தெளிவு. கதைசொல்வது கலைஞானங்களுள் (arts and sciences) ஒன்றாகும். இதில் தேர்ச்சியுள்ளார்கள் எந்நாட்டிலும்

எக்காலத்திலும் சிறந்தே விளங்குவார்கள். கிராமங்களில் குளக் கரையிலேயும், தெருத்திண்ணையிலேயும், கோவில்களிலேயும், முதியோர்கள் கதைசொல்வதையும், வாசிப்பதையும், பெரியவர் களும் சிறியவர்களும், ஸ்திரீகளும், புருஷர்களும் ஆவலுடன் கேட்டு ஆனந்திப்பதையும், நாமும் கேட்டு ஆனந்தித்திருப்பதை யும் விளக்கவும் வேண்டுமோ? வழிப்பிரயாணிகளில் முதியவர் கள் செய்யும் முக்கிய காரியம் கதை சொல்லலே.

கதைசொல்வது தொன்றுதொட்டு அனுபவிக்கப்பட்டு வரு கிறது. கதைசொல்வது பொழுதுபோக்கும் பொருட்டேயல்லா மல் அறிவூட்டும்பொருட்டு அன்றென்று அநேகர் நினைக்கக் கூடும். கதைகளினால் அறிவூட்டுவது சத்தியமென்பது நமது சொந்த ஆராய்ச்சியினாலும் அனுபவத்தினாலும் தெரியத்தக்க விஷயம். ஒருவன் வீரனாய் விளங்குவதும், ஒருவன் மற்போரிற் சிறந்து மிளிர்வதும், வேறொருவன் வித்துவானாகத் துலங்குவதும், ஒருவன் உபாத்திமைத் தொழில் மேற்கொள்வதும், ஒருவன் வக்கீல் வேலைக்குப் பிரயத்தனப்படுவதும், அவனவன் அந்தந்த விருத்திகளின் பெருமையைக்கேட்டு தன் மனதில் கொண்டிருக் கும் ஆர்வ மிகுதியினாலன்றோ? அப்படியிருக்க அறிவு செல்வங் களுக்கெல்லாம் சிறந்தது. ஏனெனில் அறிவு அழியாமல் நின்று வளரத்தக்கது, செல்லத்தக்கதின்றென்பதாம். ஆயினும் செல் வம் என்னும் வழக்கச்சொல்லையே பொருந்தி, அந்தச் செல்வத் தைச் கல்விச் செல்வமென்றும், கேள்விச் செல்வமென்றும், இருவகையாக வகுத்துள்ளார்கள். இவ்விரண்டினுள் கேள்விச் செல்வமே சிறந்ததென்பது,

செல்வத்துட் செல்வம் செவிச்செல்வ மச்செல்வம்
செல்வத்து ளெல்லாந் தலை,

என்பதனால் விளங்கும்.

போதனாமுறை பயின்றுவரும் மாணவன்,

M. P. M. Thaver,
Higher Senior,
R. C. B. & Trg. School, Trichinopoly.

நரக தர்பார்.

லூசி, கூளி.—பொடியான்கள்.

சீன்—16.

லூசிராஜன் தோற்றம்.

(நொண்டிச்சிந்து—முடுகு.)

நானொரு தலையான கூளி—இந்த
நானிலந்தனை கெடுக்கும் லூசிப்பேர் நானே.
ஒருவரையும் அரை நிமிஷம் பிரியேன்—இந்த
உலகத்தை ஒருநொடிக்குள் சுற்றியே வருவேன்.
நிமிஷத்துக் கொருவேஷம் எடுப்பேன்—எந்த
நிகரற்ற கடவுளையும் பகைவைத்து எதிர்ப்பேன்.
எவரையும் எனைத்தொழவே செய்வேன்—முடிவில்
எரிநரகம் தனில்வாழ இழுத்துமே செல்வேன்.
பொய்யை மெய்யாக ரூபிப்பேன்—பெரும்
புரட்டுகள் உருட்டுகள் போதிப்பேன் நானே.
கலகங்கள் பலமூட்டி விடுவேன்—கெட்ட
காரியத்திலாசைமிக காட்டியே கெடுப்பேன்.
கடகடெனப் புவியை அசைப்பேன்—எந்தன்
கைக்குள் ளடக்கியே ககனத்தி லெறிவேன்.

வசனம்:—அடா கூளி! யாவரும் நமது கொலுமுன்பாக ஆஜராகியிருக்கிறார்களா?

கூளி பொடியான்கள்:—(ஒரே கூச்சலிடுதல்.)

லூசி:—கூளிகாள்! இன்று இந்த பாதாளத்துக்குப் புதிதாக ஒருவரையும் சேர்க்கமுடியாமற்போனதுபற்றி மிக்க வருந்துகிறேன். நீங்களெல்லோரும் என் முன்பாக நாட்டியஞ்செய்து என் மனதைச் சந்தோஷப்படுத்துங்கள்.

பொடியான்கள் வட்டமாய் நின்று கும்மியடித்துக்கொண்டு பாடுதல்.

(என்சாவல்...என்றபடி.)

[எந்தனது திருநாடு என்ற மெட்டிலும் பாடலாம்.]

பாட்டு.

ஆதியிலே ஏகனுடன் வாதுசெய்தாய் சரணம்
அதினாலே நரகிலெம்மை அழைத்துவந்தாய் சரணம்.
எரிநரகம் ஆளுகின்ற இறையவனே சரணம்
ஏவாளை மயக்கியிந்த புவிகெடுத்தாய் சரணம்.

காயீ னுபேலைக் கொல்ல கருணைசெய்தாய் சரணம்
காசினியில் நாடோடியாய் கலங்கவைத்தாய் சரணம்.

பார்வோனென்ற மன்னவனைப் படியவைத்தாய் சரணம்
பரன்மனுவை பம்பரம்போல் ஆட்டிவைத்தாய் சரணம்.

பேயேசபூ லென்னும்நல்ல பேர்படைத்தாய் சரணம்
பிலிஸ்தியர்கள் ஜெயமடைய பேசிவந்தாய் சரணம்.

மலைமுனிவன் வருவதற்குள் மயங்கவைத்தாய் சரணம்
மற்றுமவன் முன்னேபல மாய்கைசெய்தாய் சரணம்.

சீருடைய யோபுவையும் சிதறடித்தாய் சரணம்
சேசுவென்ற கிறீஸ்துவையும் சோதித்தவா சரணம்.

யூதாஸால் மனுமகனை காண்பித்தவா சரணம்
யூதர்களின் நெஞ்சமதில் குடியிருந்தாய் சரணம்.

எரோதனைத்தன் மதனியுடன் இணங்கவைத்தாய் சரணம்
இதனாலே அருளப்பரைக் கொல்லவைத்தாய் சரணம்.

கத்தோலிக்கர் மேலே ஒரு கண்வைத்தவா சரணம்
காய்மகாரம் கொலைகளவு காண்பிப்பவா சரணம்.

கஞ்சா அபின் நல்லதென்ற கருத்தளிப்பாய் சரணம்
கள்ளு சாராயங்குடிக்க காண்பிப்பவா சரணம்.

புறணி யவதூறுகளைப் போதிப்பவா சரணம்
பொறிபறக்கும் உனதடியைப் போற்றிசெய்தோம் சரணம்.

லூசிராஜன்:—மெத்த சந்தோஷம்! மெத்த சந்தோஷம்! பேஷ்! நீங்கள் சொன்னதெல்லாம் உண்மைதான். வாஸ்தவம். வாஸ்தவம். அடா மந்திரி!

கூளி:—(விகாரமாய்க் கத்துதல்) ஊ ஊ ஊ.

லூசிராஜன்:—நரக ராஜாங்க பரிபாலனவிஷயமாக சில விஷயங்களைக் கேட்க விரும்புகிறேன்.

கூளி:—(கத்துதல்.) குகு குகு கு.

விசாரணை. (நாமாவளி.)

லூசி.

உலகத்திலென்னைத் தொழுகிறார்
உண்மைக்கடவுளைப் பழிக்கிறார்.

கூளி.

மிதிபடுங்கல்லையும் போற்றுகிறார்
மெய்யங்கடவுளைத் தூற்றுகிறார்.

JL 10241, N1190 N28-18-5
... காப்பக நூலகம்
182277
சென்னை-600 008

லூசி.

தாய் தந்தையரை யடிக்கிறாரா
தனியாய்ப் போவென முடுக்கிறாரா.

கூளி.

மாதா பிதாவை வாட்டுகிறார்
மண்டை யுடைத்தே ஓட்டுகிறார்.

லூசி.

கோரமுடன் கொலை செய்கிறாரா
குறிப்புடன் கன்னம் வைக்கிறாரா.

கூளி.

கணக்கற்ற உயிர்களை மடிக்கின்றார்
கன்னம் வைத்தே சுவரிடிக்கின்றார்.

லூசி.

மாத மூவாயிரம் தரிக்கிறதா
மருந்தினாலது மரிக்கிறதா.

கூளி.

தினமாயிரங் கரு தரிக்கிறதே
தீமருந்தாலது மரிக்கிறதே.

லூசி.

கொண்ட கணவனை வதைக்கிறாரா
கோரிய ஆண்களைத் துதிக்கிறாரா.

கூளி.

கைப்பிடி நாதனை ஏசுகிறார்
கண்டோர் களித்திடப் பேசுகிறார்.

லூசி.

ராஜர்கள் சண்டை போடுறாரா
ராச்சியம் விட்டு ஓடுறாரா.

கூளி.

அரசர்கள் சண்டைக் கேகின்றார்
அனேகம் பிரஜைகள் சாகின்றார்.

லூசி.

ஓரஞ்சொல்லித் திரிகிறாரா
ஊரில் கலகங்கள் புரிகிறாரா.

கூளி.

சத்திய கோர்ட்டில் ஏறுகிறார்
சாட்சியும் பொய்யாய்க் கூறுகிறார்.

லூசி.

ஏழைமேற் சினங் காட்டுருரா
இல்லாத பழி மூட்டுருரா.

கூளி.

வலியவ ரேழையை மோதுகிருர்
வஞ்சக மாய்க்குறை யோதுகிருர்.

லூசி.

வேத குருக்களை எதிர்க்கிருரா
வீணரை வம்பரை மதிக்கிருரா.

கூளி.

குருக்களுடன் போராடுகிருர்
கூத்துகள் நாடகம் பாடுகிருர்.

லூசிராஜன் :—சரி. சரி. அப்படியானுல் இன்று ஏன் ஒருவரையும் நமது ராஜ்யத்துக்கழைத்துவரவில்லை? நீங்கள் சரியாய் வேலை செய்வதில்லைபோலிருக்கிறது. (பலபெயரிட்டு ஒவ்வொன்ருய்க் கூப்பிட்டு தண்டித்தல்.)

S. Aruldass,
Viriyur.

பாலர்க்கேற்ற நீதிவாக்கியங்கள்.

1. அருமைப் பெற்ருேரை அன்பாய் நேசி.
2. ஆலயஞ் சென்று அமலனை வணங்கு.
3. இல்லாததைக் கேட்டுத் தொல்லை செய்யாதே.
4. ஈனருடன் கூடி மானங் கெடாதே.
5. உத்தமர் பலரை நத்திச் சிநேகி.
6. ஊரார் பொருளை ஒருபோதுந் தொடாதே.
7. எல்லாரும் புகழ நல்ல பிள்ளையாயிரு.
8. ஏழைக்கிரங்கி ஏதாகிலுங் கொடு.
9. ஐயன் பாதத்தை ஆவலாய்த் தேடு.
10. ஒருவருக்குந் தீமை ஒன்றுஞ் செய்யாதே.
11. ஓரற்ப வேலையையும் ஒழுங்குடன் செய்.
12. ஔஷதமதை அருந்துவதைக் குறை.
13. அஃக விளைவை மிக்க விருத்தி செய்.
14. கடவுளை வணங்கக் காலையில் எழுந்திரு.
15. சண்டை செய்யாதே சமாதானமாயிரு.
16. தந்தையைச் சங்கித் தாயை நேசி.

17. தருண சகாயம் அரிய சகாயம்.
18. நரைத்த தலைக்குச் சிரமதைப் பணி.
19. நன்றாய்க் கற்றால் நன்மைகள் நாடும்.
20. நல்ல மனச்சாட்சியே நல்ல சந்தோஷம்.
21. பரமனை நேசி பாவத்தைப் பகை.
22. பத்துக் கற்பனைகளை உத்தமமாய் அனுசரி.
23. பரிசுத்த பிள்ளை பரமனின் பிள்ளை.
24. மதுர வசனம் மனிதரைச் சேர்க்கும்.
25. வஞ்சகப் பேச்சு நஞ்சுக்குச் சரி.

சூ. ஆரோக்கியசாமி,
போர்டு பெண்பாடசாலை, மானாமதுரை.

மதிப்புரை.

"The Rose Primer, ரோஜாப்பூ பாலசிட்சை."—(திரிசிராப்பள்ளி ரேஞ்சு டிப்டி இன்ஸ்பெக்டர், ஸ்ரீமான் R. கிருஷ்ணஸாமி அய்யங்கார் அவர்களால் இயற்றப்பட்டது. துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பட்டது. விலை. 2 அணு 6 பைசா). வாசக பாடம் கற்பித்தலின் முக்கிய நோக்கம், எடுத்த புத்தகத்தைத் தெளிவாய் வாசிக்கும்படி செய்தலும், படித்த விஷயத்தைத் தெளிவாக அறியச்செய்வதும் ஆகும்.

'பெரும்பான்மையான பிள்ளைகள் தடுமாற்றமின்றி படித்த போதிலும், படித்த விஷயத்தைத் தெளிவாக எடுத்துரைக்கும் சக்தியற்றவர்களாக இருக்கிறார்கள். இதற்குக் காரணம் பாலர் வகுப்பு முதற்கொண்டே பிள்ளைகளுக்கு தாம் படிக்கும் எழுத்துக்கள், அவற்றின் ஒலி, வடிவம் முதலியவற்றைமட்டும் கவனிக்கும் பயிற்சி ஏற்பட்டிருக்கிறதேயன்றி, பதங்களாவது, பதத்தொடர்ச்சியாவது குறிக்கும் விஷயத்தைப் படிக்கும்போதே மனதில் பதியவைத்துக்கொள்ளும் சக்தி ஏற்படுவதில்லை.

பாஷையில் பதம், அர்த்தம் இவ்விரண்டினுள் அர்த்தமே முக்கியமாதலாலும், அர்த்தமின்றித் தனித்து நிற்கும் பதமாயினும், எழுத்துக்களாயினும் பாலர்களுக்கு பயன்படாதாதலால், அட்சரங்களைத் தனியாகக் கற்பியாது, அவர்களின் பழக்கத்தில் வழங்கிவரும் சாதாரண வஸ்துக்களை அல்லது செய்கைகளைக் குறிக்கும் பதங்களையே முதலில் கற்பிக்க ஆரம்பித்து, அவை மூலமாக எழுத்துக்களைக் கற்பித்தல் வேண்டும். இவ்வாறு செய்வதால் ஆரம்பம் முதற்கொண்டே விஷயத்தைத் தெரிந்துகொள்

வதற்கும், பதங்களைப் படிக்கும்போதே அப்பதங்கள் குறிக்கும் விஷயங்களின்மீது மனதைச் செலுத்தும் சுபாவம் பாலர்கட்கு எளிதில் ஏற்படுவதற்கும் அநுகூலமாக இப்புத்தகம் வரையப்பட்டுள்ளது' என்று குறிப்பினுள் கூறியுள்ளதை, இப்புத்தகத்தை உபயோகிக்கும் ஆசிரியர்கள் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் காணலாம்.

மற்றும் பாலர்கள் படிப்பதில் குறில், நெடில் இவைகளைக் கவனியாது ஏராளமான பிழை செய்கிறார்கள். இக்குறையை நீக்குவதற்குப் போதுமான அப்பியாசங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

இன்னும் சிலர் வடமொழி எழுத்துக்கள் சம்பந்தமான சொற்களைக் கடைசியில்தான் கற்பிக்கவேண்டுமென்று அபிப்பிராயப்படுகிறார்கள். இவ்விஷயமாக ஆசிரியர்களுள் அபிப்பிராய பேதமுண்டு. ஆனால், இங்கோ, வடமொழி எழுத்துக்களைக் கடைசியில் ஒதுக்கிவிடக்கூடாது எனக்கருதி, 9-வது பாடத்திலேயே அவ்வெழுத்துக்கள் சம்பந்தமான பதங்களை ஆரம்பித்துள்ளார்.

மற்றும் உருவப்படங்கள் பாலர்களின் மனதைக் கவரத்தக்கவைகளாகவும், எழுத்துக்கள் பெரியவைகளாகவும், சுத்தமாகவும் அமைந்துள்ளன.

இப்புத்தகத்தை ஆரம்ப ஆசிரியர்கள் தக்கவாறு உபயோகித்துப் பலனெய்துவார்களென நம்புகிறோம்.

நோட் வர்ணமெட்டு.

(கதைக்குச் சம்பந்தமான கும்மிப்பாட்டு.)

1. காகம் ஒன்று தாகங் கொண்டு சோகமானதினால்
வேகமாக ஓடி ஒரு வீட்டின் முன்பாக
வாசலிலே நீர்க்குறைந்த, மட்குடம் ஒன்று......

2. குடத்திலுள்ள தண்ணீர் குறைந்திருந்ததினால்
அடுத்தடுத்துக் கற்கள் பொறுக்கி
அதனுள் போட்டதாம்........காகம் ஒன்று.

3. குறைந்திருந்த தண்ணீர் குடத்தின் மேல் வர
திறமுடனே குடித்துக் காகம்
சிறகடித்தேகினதாம்...காகம் ஒன்று.

4. முயற்சியைக் கைக்கொள்வோர்
முழுதும் மென்மேலாம்
இகழ்ச்சியடையார் என்று சொல்லும்
பழமொழி உண்டாமே..........காகம் ஒன்று.

Arockiamary Arulanandame,
Higher Grade,
R. C. Girls' Training School, Trichinopoly.

விடுகதை.

எட்டெழுத்துக்களமை மொழி யொன்றாமே
இந்துமத வெட்டெழுத்துக்களன்றே
இயல்பதா யாலுடனீறுஞ் சேரில்
வினியதோர் மோசசின் முதலாமாக
மட்டிலோர் மாந்தனின் பெயரதாகும்
மறைவின்றி யைந்தையுங் கூட்டிச்சேர்க்கின்
மானிடச் சுவைகளி லொன்றதாகும்
மாண்புட னைந்தேழு மீறுங்கூடில்
மட்டிலாச் சிருஷ்டியி னாமமாகும்
மற்றதோ ராறெழு மீறுங்கூட்ட
மறைந்தொழியு மாந்தனின் பிணியொன்றாகும்
மகிழ்வதாய் மனுடரின் பானமாக
திட்டமாய் மூன்று நாலாறுஞ் சேர்ப்பீர்
திடமான ஸ்பீரித்து சாந்துவானார்
திருவான குணமாகு மிரண்டொன்றீறே
திரும்பவுங் கடையெழுத் தைந்துஞ் சேரிற்
வட்டமார் சிருஷ்டியதின் குணமொன்றாச்சே
வருமுழு மொழியதைக் காண்பீராயின்
வளமிகு நன்மனித நாமமாமே
வந்திடு மெண்பத வார்த்தையாமே.

Thomas Arulanandame,
Teacher,
அர்ச். அன்னம்மாள் மடம்.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
182277
சென்னை

PERMISSU SUPERIORUM.
St. Joseph's Industrial School Press, Trichinopoly.—1928.